## சென்னை கிழக்கு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

## 2025 பிப். 20 (இன்று) முதல் 2026 பிப்ரவரி 19 வரை

# 365 நாட்களும் நாள்தோறும் 1000 பேருக்கு காலை உணவு வழங்கும் சிறப்புத் திட்டம்!

## முதல் நாள் நிகழ்ச்சியை – இன்று திருமதி. துர்கா ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, பிப். 20-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் சிறப்புமிகு திட்டத்தின் முதல் நாள் நிகழ்ச்சியை திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார் என அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72 வது பிறந்த நாளையொட்டி 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும் சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தை வரும் பிப்ரவரி 20ஆம் தேதி வியாழன் அன்று காலை 7.30 மணி அளவில், முதலமைச்சரின் முத்திரை திட்டமான அகரம், ஜெகநாதன் சாலையில் அமைந்துள்ள படிப்பகம் அருகில், அண்ணியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் "அன்னம் தரும் அமுதகரம்" திட்டத்தை தொடங்கி வைக்கிறார். அதன் தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்படும்.

திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இச்சிறப்புமிக்க தொடக்க விழாவில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஷேக் அப்துல்லா, கே.சந்துரு, எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எஸ்.மணிமுடி எம்.சி, சங்கரிநாராயணன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிவதி எத்திராசன் எம்.சி, பி.கே.மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, பி.ஸ்ரீராமுலு, சரிதாமகேஷ்குமார்எம்.சி. ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ். முரளி, எஸ். ராஜசேகர், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம்.இ.கனி, இரா. கலைச்செல்வி, அ.நிர்மலாதேவி, ரமேஷ் (எ) நீலகண்டன், பி.பூர்ணிமா, ஜெ.பாலமுருகன், க. வினோத், ஜி.ஜே. பிரபு, எஸ்.தனசேகர், பா.ஜெகதீஷ், சங்கர்நானா, வானவில் விஜய், நா. துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, துரை கண்ணன், எம்.பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், இரா. வீரமணி, கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து. ஆயிரம், எம்.விநாயகம், பி.விஜயகுமார் நா.துலுக்கானம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், ஆர்.எஸ். சித்திக்,ஆகியோர்சிறப்பிக்கின்றனர்.

---

## ‘திராவிடப் பண்ணை’ இல்லத் திருமணவிழா

# திருச்சி கிழக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ர.முத்துதீபக் - ஜனனி அர்ச்சனாவின் சுயமரியாதைத் திருமணம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து சிறப்புரை!






திருச்சி, பிப். 20–

**திருச்சியில், கழகம் வளர்த்த முன்னோடி ‘திராவிடப் பண்ணை’ முத்துக்கிருஷ்ணன் அவர்களின் பேரனும், அண்ணன் ரவீந்திரன் – கமலா இணையரின் மகனும், திருச்சி கிழக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளருமான ர.முத்துதீபக் – ஜனனி அர்ச்சனாவின் சுயமரியாதைத் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர் இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கும் மணமக்கள் இருவரும் பெரியாரும் – பகுத்தறிவும் போல, அண்ணாவும் – மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் – கழகமும் போல, தலைவர் அவர்களும் – உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திச் சிறப்புரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வருமாறு:

திராவிட இயக்கத் தீரர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உற்ற நண்பர், `திராவிடப் பண்ணை’ பெரியவர் முத்துக்கிருஷ்ணன் அவர்களின் பேரன், கழக இளைஞர் அணியின் மாநகர அமைப்பாளர் தம்பி முத்து தீபக், ஜனனி அர்ச்சனா இணையர்களின் திருமணத்தை உங்கள் அனைவரின் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எத்தனையோ திருமணங்களில் கலந்துகொண்டாலும், இந்தத் திருமணத்தில் கலந்துகொள்வது, நம் குடும்பத் திருமணத்தில் கலந்துகொள்வது போல ஒரு நெகிழ்ச்சி ஏற்படுகிறது.

தம்பி முத்துதீபக்கின் தந்தையார் ரவீந்திரனின் திருமணத்தை நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்கள். இன்றைக்கு தம்பி முத்துதீபக்கின் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்ற பெருமையைப் பெற்று இருக்கிறேன்.

### திராவிடப் பண்ணை!

பெரியவர் ‘திராவிடப் பண்ணை’ முத்துக்கிருஷ்ணன் அவர்களை எடுத்துக் கொண்டால், அவர் திராவிடத்தின் அச்சு வடிவம் என்று சொல்வார்கள். ஏனென்றால், நம் திராவிட இயக்கம் தோன்றிய காலத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்களை எல்லாம் பதிப்பித்தவர் பெரியவர் முத்துக்கிருஷ்ணன் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்போது திருச்சி வந்தாலும், பெரியவர் முத்துக்கிருஷ்ணன் அவர்களின் திராவிடப் பண்ணையில்தான் தங்கி இருப்பார். அதைப்பற்றி கலைஞர் அவர்கள் நகைச்சுவையாக ஒரு சம்பவத்தை கூறியதுண்டு. 1957-ஆம் ஆண்டு முதன் முறையாக சட்டமன்ற உறுப்பினராகி கலைஞர் அவர்கள் வெற்றி பெறுகிறார்.

### பண்ணையில்தான் தங்குவார்!

சென்னையிலிருந்து திருச்சிக்கு இரயில் மூலமாக கலைஞர் அவர்கள் வந்து கொண்டு இருக்கிறார். இரயிலில் ஒரு அதிகாரி கலைஞரைப் பார்த்து, “நீங்கள் திருச்சிக்கு செல்கிறீர்கள். எங்கு தங்க போகிறீர்கள்” என்று கேட்கிறார். அதற்கு கலைஞர் அவர்கள், “நான் எப்போதுமே பண்ணையில்தான் தங்குவேன்” என்று சொல்கிறார். உடனே, அந்த அதிகாரி மேலும், கீழும் பார்க்கிறார். உடனே, சுதாரித்துக்கொண்ட கலைஞர் அவர்கள், “நான் பண்ணை என்று சொன்னது, பணக்காரர் இருக்கும் பண்ணை அல்ல, நான் சொன்னது, முத்துக்கிருஷ்ணன் என்னும் என் நெருங்கிய நண்பரின் திராவிட இயக்கப் பண்ணை” என்று சொன்னார் கலைஞர் அவர்கள்.

### கழகத்தை உயர்த்தியவர்!

“இலட்சங்களைக் கொண்டவர்களின் பண்ணையை விட, இலட்சியவாதிகளின் பண்ணையே சிறந்தது” என்று கலைஞர் அவர்கள் மேலும் குறிப்பிடுகிறார். அப்படிப்பட்ட இலட்சியவாதியான திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன் அவர்களின் இந்தப் பகுதியில், தாத்தா அன்பில் தர்மலிங்கம் அவர்களுடன் சேர்ந்து, கழகப் பணி ஆற்றியவர், கழகத்தை உயர்த்தியவர். அப்படிப்பட்ட திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த தம்பி முத்துதீபக் அவர்களின் திருமணத்தை நடத்தி வைப்பதில், பெருமை அடைகிறேன்.

தன் தாத்தாவைப்போல, தம்பி முத்துதீபக் அவர்களும் இன்றைக்கு கழகத்திற்காக, மக்களுக்காக உழைத்துக் கொண்டு இருக்கிறார். மலைக்கோட்டைப் பகுதி துணை அமைப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றிய அவர், இன்றைக்கு இளைஞர் அணியின் மாநகர அமைப்பாளராக, பொறுப்பு உயர்த்தப் பட்டு இருக்கிறார்.

‘இளைஞர் அணி மாநாடு’, ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’, `கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி’ என்று இளைஞர் அணிப் பணிகளுக்காக முத்துதீபக் அவர்கள் செய்த பங்களிப்பும், உழைப்பும் மிகுந்த போற்றுதலுக்குரியவை, பாராட்டுதலுக்குரியவை.

### இருமொழிக் கொள்கை!

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். இருவரும் இருமொழிக் கொள்கையில் படித்தவர்கள். இருமொழிக் கொள்கையில் படித்து, இன்று நல்ல நிலையில் மணமக்கள் இருவரும் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்தத் திருமணத்தில் கூடுதல் சிறப்பு, இது சுயமரியாதைத் திருமணம்.

சுயமரியாதைத் திருமணம் மட்டுமல்ல, இது கலப்புத் திருமணம். எனவே, அவர்கள் இரண்டு பேருக்கும் எனது குடும்பத்தாரின் சார்பாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறேன். இங்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் நேற்று மாலை சென்னையில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி முடித்துவிட்டு, இங்கு வந்து இருக்கிறோம். இன்றைய அரசியல் கள நிலவரம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து நம் தமிழ்நாட்டு மக்களை, தமிழ்நாட்டை வஞ்சித்துக்கொண்டு வருகிறது.

### நிதி தர மறுப்பு!

சென்ற டிசம்பர் மாதம், சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டன. நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக ஒன்றிய பிரதமரிடம் `6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி வேண்டும், கொடுங்கள்’ என்று கேட்டார். அதுவும் கொடுக்கவில்லை. வெறும் 900 கோடிதான் கொடுத்தார்கள்.

ஒன்றிய அரசு பட்ஜெட் தாக்கல் செய்தது. அதில் ஒரு ரூபாயைக்கூட தமிழ்நாட்டிற்கு ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு ஒதுக்கவில்லை. ஒரு ரூபாய் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பெயரையே பட்ஜெட்டில் தவிர்த்தார்கள். `தமிழ்நாடு’ என்ற நம் மாநிலத்தின் பெயர்கூட அந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

இன்றைக்கு மும்மொழிக் கொள்கையைத் திணிக்கிறார்கள். இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் நம் மீது ஒரு இந்தித் திணிப்பை, தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்கிறார்கள். இந்தி படித்தால் மட்டும்தான் உங்களுக்கான கல்வி நிதி 2,150 கோடி ரூபாயைத் தர முடியும் என்று சொல்கிறார்கள்.

### மிகப்பெரிய ஆர்ப்பாட்டம்

இந்தி படித்தால் மட்டும்தான் தருவோம். அப்படி இல்லை என்றால், மற்ற மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுப்போம் என்று பிரித்துக் கொடுத்துள்ளார்கள். ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் இதை நேரடியாகவே சொல்லி இருக்கிறார். இதையெல்லாம் கண்டித்து, நம் நிதி மற்றும் கல்வி உரிமை வேண்டும் என்றுதான் நேற்று சென்னையில், ஒரு மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நம் தலைவரின் அறிவுறுத்தலின் பேரில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பாக, மிகப்பெரிய ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருக்கிறோம்.

இது எதுவோ தனிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சினை கிடையாது. தனிப்பட்ட பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் பிரச்சினை கிடையாது. இந்தியக் கூட்டணியின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மாணவர்களின் பிரச்சினை. தமிழ்நாட்டு மாணவர்களின் பெற்றோர்கள் கொடுத்து இருக்கின்ற வரியை, நமது உரிமையைத் திரும்பக் கேட்கிறோம். ஒன்றிய அரசு அதைத் தர மறுக்கிறது.

எனவே, நேற்று ஆர்பாட்டத்தில் பேசும் போதுகூட, இன்று ஆர்ப்பாட்டத்தில் ஆரம்பித்து இருக்கிறோம். அந்த நிதியை நீங்கள் கொடுக்கவில்லை என்றால், தமிழ்நாடு முழுவதும் நாங்கள் போராட்டக்களத்தில் இறங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களின் நிதி உரிமையை, கல்வி உரிமையை நாங்கள் என்றென்றும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று நேற்று கூறி இருக்கிறோம்.

### தமிழ்ப் பெயர் சூட்டுங்கள்!

இதை நீங்கள் அனைவரும் மக்களிடத்தில் எடுத்துச்செல்ல வேண்டும். திருமணத்திற்கு வந்திருக்கின்ற ஒவ்வொருவரும், தமிழ்நாட்டின் மொழி உரிமை எவ்வளவு முக்கியம், கல்வி உரிமை எவ்வளவு முக்கியம் என்பதை, மக்களிடத்தில் எடுத்துச்சென்று சேர்க்க வேண்டும். கல்வி, நிதி உரிமை நிறைவேறும் வரை, நம் போராட்டம் மிகப்பெரிய போராட்டமாக வலுபெற வேண்டும் என்று இந்த இடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மணமக்கள் இருவருக்கும் ஒரு வேண்டுகோள். இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சுயமரியாதையுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். மேலும், உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு அழகிய ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, மணமக்கள் இருவரும் பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கலைஞரும் கழகமும் போல, நம் தலைவர் அவர்களும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்தி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப்பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக மாநிலங்களவைக்குழுத் தலைவருமான திருச்சி சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், இனிகோ இருதயராஜ், அப்துல் சமத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.என்.சேகரன், பெரியசாமி, திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி, மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாநகர மேயர் அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், திருச்சி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் குண்டூர் எஸ். பாலமுருகன், பெ.ரவீந்திரன், வர்நாட் சாமிநாதன், தேசிங்குராஜா, விஷ்ணுவர்தன், கார்த்திகேயன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அல்லாபிச்சை, கண்ணன், ரஞ்சித்குமார், சையத் சாகிப், சரத்குமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.